# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : STC 147/2025 (419/2024 ) |
| Deposition of witness for | Prosecution : LW 9- PW 9 |
| | Defence : |
| | Court : |
| Name : முனீஸ்வரன் | Father's Name: மாணிக்கம் |
| | Husband Name: |
| Village/Town : ராணிப்பேட்டை | Taluk : |
| மாவட்டம், கொண்டம்பாளையம் | Calling : உதவி ஆய்வாளர் |
| காவல் நிலையம் | Age : 56 |
| Mail ID: munees829tvm@gmail.com | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10.06.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ராணிபேட்டை மாவட்டம் கொண்டம்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரா பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.12.2021ம் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலையப்பொறுப்பில் இருந்த போது அன்றைய தினம் பகல் 01.00 மணியளவில் குமரவேல், வயது-63, த/பெ. ஆதிமூலம், பிள்ளையார் கோவில் தெரு, எறும்பூண்டி கிராமம், கீழ்பென்னாத்தூர் தாலுக்கா என்பவர் நிலையம் ஆஜராக கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலையக் குற்ற எண்.753/2021, ச/பி. 279, 337 இ.த.சவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

அன்றைய தினமே பகல் 02.00 மணியளவில் சம்பவயிடமான கீழ்பென்னாத்தூர் – அவலூர்பேட்டை மெயின்ரோடு கீழ்பென்னாத்தூர் கோட்டான் ஏரி கன்னிமார் கோவில் அருகே சென்று அங்கிருந்த சாட்சிகள் ரஞ்சித்குமார், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.8** ஆகும். பின்னர் சம்பவ இட சாட்சிகளான குமரவேல், கார்த்திக், வெங்கடகிருஷ்ணன், முருகன், ரஞ்சித்குமார், வெங்கடேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் விபத்துக்குள்ளான TN 25 BL 5128 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை 11.12.2021ம் தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன். சம்பவயிட சாட்சிகளின் விசாரணை மூலமும், எனது விசாரணை மூலமும் சம்பவம் நடந்து உண்மை என தெரியவரவே இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில், 24.12.2021ம் தேதியன்று 11.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி முருகன் என்பவரை கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தின் முன்பு ஆஜரானவரை குற்றக் காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்துவந்து தக்க இருநபர் பிணையம் பெற்று நிலையப்பிணையில் விடுவித்தேன். அன்றைய தினமே விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BA 2000 என்ற பதிவெண் கொண்ட ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும்பொருட்டு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். பின்னர், விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. விஜயகுமார் என்பவரை

22.10.2022–ம் தேதியன்று விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் இவ்விபத்தில் காயம்பட்ட அ.சா.2 கார்த்திக் என்பவரை திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. கிருஷ்டி ஜெயமுருகன் என்பவரை விசாரணை செய்து விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். விபத்தில் காயம்பட்ட அ.சா.2 கார்த்திக் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய காயச்சான்றில் அவருக்கு ஏற்பட்ட 1, 2, 4 மற்றும் 7வது காயங்கள் கொடுங்காயம் என கருத்துரை வழங்கியுள்ளதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.சவில் இருந்து 279, 338 இ.த.சவாக சட்டப்பிரிவு மாற்றம் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 22.10.2022ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரித்தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இந்த வழக்கின் புகார்தாரர் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சி இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் புகார்தாரர் அடிப்பட்ட அ.சா.2யை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு வந்து இரண்டு நாட்கள் கழித்து புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி அ.சா.1னின் மகன் சம்பவத்தைப் பற்றியும் மற்றும் எதிரி மற்றும் எதிரியின் வாகனத்தின் மூலமாகத்தான் அ.சா.2க்கு விபத்து ஏற்பட்டது என்று அ.சா.1 ஏதும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் சம்பவத்தை யார்

பார்த்தார்கள் என்று சாட்சியின் பெயரை ஏதும் குறிப்பிட்டு புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரிதான் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று யார் சொல்லி எதிரியை வழக்கில் சேர்த்தோம் என்றால் சாட்சி வெங்கட கிருஷ்ணன் சொல்லித்தான் எதிரியை கைது செய்தோம். மேற்படி புகாரிலோ அல்லது வெங்கடகிருஷ்ணன் என்பவரின் சாட்சிய வாக்குமூலத்திலோ எதிரிதான் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று ஏதும் இல்லை என்றால் எனது ரகசிய விசாரணையின் அடிப்படையில்தான் மேற்படி வாகனத்தை ஓட்டியது எதிரி என்று தெரிந்துகொண்டேன். மேற்படி குற்ற இறுதியறிக்கையில் நான் ரகசிய விசாரணையின் அடிப்படையில் தான் எதிரி குற்றவாளி என்று முடிவு செய்ததாக ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை வைத்து சாட்சி வெங்கட கிருஷ்ணன் என்பவரின் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு ஏதும் நடத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் காவல் நிலையத்தில் இருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கும் அ.சா.1 கொடுத்த புகாருக்கு இடைபட்ட காலத்தில் மேற்படி சம்பவத்தைப் பற்றி எங்களுக்கு தகவல் கிடைத்ததா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் தொடர்பான இரண்டு வாகனங்களையும் எப்போது காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தோம் என்றால் அன்றைய தினமே கொண்டுவந்துவிட்டோம். மேற்படி இரண்டு இருசக்கர வாகனங்களின் உடைந்த பாகங்கள் ஏதேனும் அல்லது சேதமான பொருட்களை ஏதும் சம்பவ இடத்தில் நாங்கள்

கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அப்போது நான் பார்வை மகசர் மற்றும் பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் அ.சா.2 கார்த்திக் சிகிச்சையில் இருந்தார் என்றால் சிகிச்சைக்கு சேர்ந்த தினமே வெளியேறிவிட்டார் என்றால் சரிதான். அ.சா.2யை புகார்வாக்குமூலம் கொடுத்த அன்றைய தினமே அ.சா.2ன் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளதாக கோப்பில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அ.சா.2 முதல் அ.சா.4 வரையான வாக்குமூலங்களில் 17.12.2021ம் தேதி என்று பிரிண்ட் செய்யப்பட்டு பின்னர் பதினேழில் உள்ள 1 யை 0 வாக மையால் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி வாக்குமூலங்கள் அனைத்துமே ஜோடிக்கப்பட்ட வாக்குமூலங்கள் என்றால் சரியல்ல. மேற்படி அ.சா.2ன் வாக்குமூலத்தை நான் எங்கு வைத்து பதிவுசெய்தேன் என்றால் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் வைத்து பதிவுசெய்தேன். மேற்படி அ.சா.2– 07.12.2021ம் தேதியன்று அரசு மருத்துவமனையிலேயே சிகிச்சையில் இல்லாத நிலையில் நான் அவரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்ய வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பெங்களூரு மிலிட்டரி மருத்துவமனையில் அ.சா.2க்கு எந்தவிதமான சிகிச்சை அளித்தார்கள் என்ற எந்தவொரு மருத்துவ சான்றுகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பெங்களூரு மிலிட்டரி மருத்துவமனையில் அ.சா.2க்கு சிகிச்சை அளித்த மருத்துவரின் வாக்குமூலங்களையும் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக சொல்லப்படும் இரு வாகனங்களையும் நான்

காலதாமதமாகத்தான் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன் என்றால் சரிதான். அ.சா.2 தான் வாகனத்தை ஓட்டிச்சென்று தவறுதலாக அவரே விழுந்துவிட்டு மேற்படி மோட்டார் வாகன விபத்து இழப்பீடு பெறவேண்டி எதிரியின் மீது தவறுதலாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இறுதியறிக்கைக்கும் இந்த எதிரிக்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்றாலும், மேற்படி பார்வை மகசர் சாட்சிகள் இருவருமே காவல் நிலையம் முன்பு உள்ள ஆட்டோ ஸ்டான்டில் ஆட்டோ ஓட்டும் ஆட்டோ ஓட்டுநர்கள் அவர்கள் எங்கள் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை ஓட்டிவந்த அ.சா.2 கவனமாகவோ, மெதுவாகவோ வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்று எனது விசாரணையில் ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி அ.சா.2 இராணுவத்தில் பணிபுரியும் நபர் என்றால் சரிதான். மேற்படி அ.சா.2 ராணுவத்தில் பணிபுரிவதால் அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் சரிவர விசாரணை செய்யாமல் இறுதியறிக்கை தாக்கல் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd- (M.C. Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்